# திருவாரூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : முனைவர்.அபுகழேந்தி

ப.மு.எண்.3735/அ1/2024 நாள் . 18.06.2024

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருவாரூர் மாவட்டம் - திருவாரூர் மாவட்டக் கல்வி அலுவலகம்(இடைநிலை) - இளநிலை உதவியாளர் - செல்வி.பா.புனிதா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் சார்பு.

பார்வை: 1)அரசாணை எண். 101 பள்ளிக்கல்வித்துறை நாள் 18.05.2018.

2)அரசாணை எண்.151 பள்ளிக்கல்வித்துறை நாள்.09.09.2022

3) திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 09494/அ1/2023 நாள். 27.09.2023

4) திருவாரூர் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 9334/அ1/2023 நாள். 29.04.2024

-----

ஆணை

பார்வை 3 இல் காணும் திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி -IV தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு திருவாரூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலை) இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் செல்வி.பா.புனிதா என்பாருக்கு பார்வை (2) இல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. பணிவரன்முறை செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பணியாளரது பணிப்பதிவேடு பார்வைக்குப்பின் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

19.6.24

முதன்மைக் கல்வி அலுவலர்,

திருவாரூர்.

19.6.2024

பெறுநர்

செல்விபாபுனிதா

இளநிலை உதவியாளர்,

மாவட்டக் கல்வி அலுவலகம்(இடைநிலை),

திருவாரூர் .( உரிய வழியாக)

நகல்- மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருவாரூர்.